# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM.

S.C.No.217/2022

Deposition of witness for Prosecution – PW9

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : | தங்கம்(எ)இளங்கோ | Caste | : |
| S/o. | : | காத்தான் | Calling | : |
| Village | : | | Religion | : |
| Taluk | : | | Age | : |

Solemnly affirmed on 19.09.2025 in accordance with the provisions of Oaths Act No.44 of 1969.

Accused present.

முதல் விசாரணை :

நான் சங்ககிரி வட்டம், அரசிராமணி கிராமம், செட்டிப்பட்டி வன்னியர் தெரு, துர்கை சுடலை காளியம்மன் கோவில் அருகில் குடியிருக்கிறேன். நான் விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்குத் தெரியும். அவர் பெயர் போர்மன்னன். அவர் எனக்கு பங்காளி. வழக்கில் இறந்துபோன ஆனந்தனை எனக்குத் தெரியும். அவர் கோவில் பூசாரியாக இருந்து கொண்டு விறகு அடுப்புக்கரி வியாபாரம் செய்து வந்தார்.

ஆனந்தன் இறப்பதற்கு முன்னர் அன்று இரவு கட்டிலில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார். நான் உறங்க சென்றுவிட்டேன். இரவு 12.00 மணிக்குமேல் நான் பாத்ரூம் செல்வதற்காக வெளியே வந்து பார்த்தேன். அப்போது சுடலை காளியம்மன் கோவில் முன்னர் கும்பலாக இருந்தார்கள். நான் என் வீட்டிலிருந்து பார்த்தபோது பூசாரி ஆனந்தனை யாரோ வெட்டிவிட்டார்கள் என்று சொன்னார்கள். வேறு எதுவும் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

பூசாரி ஆனந்தன் எனக்கு பங்காளி முறை என்றால் சரி. போலிசார் என்னை விசாரித்தபோது நான் வீட்டு காம்பவுண்டிற்குள் இருந்து பார்த்தேன், அப்போது 50 பேர் இருந்தார்கள் என்று சொல்லி உள்ளேன் என்றால் சரி. அப்போது போலிசார் எத்தனை பேர் இருந்தார்கள் என்றால் 2 போலிசார் இருந்தார்கள். மறுநாள் காலை போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றால் சரி, மீண்டும் ஒரு வாரம் கழித்து என்னை போலிசார் விசாரித்தார்கள். சம்பவத்தன்று இரவே போலிசார் எதிரியை கைது செய்துவிட்டார்கள் என்றால் எனக்குத் தெரியாது. நான் போலிசார் சொல்லிக்கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/- S.Sumathy,
Principal Sessions Judge, Salem.